மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Beliefs and Omens of the People of Thinaikkudimanthar

Dr. N. Vennila

Associate professor, Department of Tamil, Krishnasamy College Science Arts and Management for women, Cuddalore, India

Manuscript ID : **MT111A0136**

Volume : **3**

Issue : **2**

Month : **June**

Year : **2023**

Received: 05.05.2023
Revised: 05.06.2023
Accepted: 12.06.2023
Published: 20.06.2023

Pages : 17-29

DOI: 10.5281/zenodo.8054987

ABSTRACT:

In the context of ancient Tamil beliefs, good and bad omens were observed. The sound of wall lizard, the cooing of a cuckoo inside the house, storks fly up in the sky, the blowing of a swarm of beetles in the bush, bangles were tight on the front hand and shoulders, throbbing of the left eye, shepherd's pipe sound - all these were considered good omens. At the same time, bad omens were also heavily regarded. Heat in all eight directions, the Sun appearing red and hot, the sound of owls and other birds that bring bad luck, like a tooth falling to the ground in a dream, like the crumbling of forts with soldiers inside, and similar signs of misfortune were believed by the ancient Tamil people. They saw these as indicators of impending danger. The sound of thunder during the night, the failure of a lamp lit at home, and the inability to sleep were also considered inauspicious. Frightened by signs of impending danger, they sought the protection of God.

KEYWORDS:

Thinaikkudikal, Nimitham, Palaium Onthium, Balli Nimitham, Narsol, Deenimitham, Kazhangu, Kannam, Kattu

திணைக்குடிமாந்தர்களின் நம்பிக்கைகளும், நிமித்தங்களும்

முனைவர். ந. வெண்ணிலா,
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, கிருஷ்ணசாமி மகளிர் அறிவியல் கலை மற்றும் மேலாண்மையியல் கல்லூரி, கடலூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

நிமித்தங்களில் நன்னிமித்தமும், தீநிமித்தமும் என்னும் நிலை பழந்தமிழர்களிடையே காணப்பட்டது. சுவர்ப்பல்லியின் ஒலி, மனையின் நொச்சியில் உள்ள குயிலின் கூவல், குருகுகள் விசும்பில் எழுந்து பறத்தல், வண்டுகள் புதரில் சூழ்ந்து ஊதுதல், முன்கை வளையும், தோள்வளையும் இறுகுதல், இடக்கண் ஆடுதல், ஆயரது குழல் ஒலி இவையெல்லாம் நன்னிமித்தங்களாகக் கருதப்பட்டன. அதே வேளையில் தீநிமித்தங்களும் பெருமளவில் பார்க்கப்பட்டன. எட்டுத் திசைகளிலும் எரிதல், கொடிய கிரணம் உடைய சூரியன் பல இடத்தும் நெருங்கித் தோன்றுதல், அச்சம் தரும் கூகை முதலிய பறவைகளின் ஒலி, கனவில் பல் நிலத்தில் வீழ்வதைப் போலவும், படைக்கலங்கள் தாம் இருந்த கட்டிலுடன் மறிவதைப் போலவும் காணப்படுதல் முதலியவையெல்லாம் தீமை நிகழ்வதை அறிவிக்கும் குறிகள் எனப் பழந்தமிழ் மக்கள் நம்பிக்கைக்கொண்டனர். இரவின் நடுவானத்தில் வந்து தும்பி ஒலித்தலும், வீட்டில் வைத்த விளக்கு எரியாது அணைதலும் தீய நிமித்தமாகக் கொள்ளப்பட்டன. தீய நிமித்த அறிகுறியைக் கண்டு அஞ்சி கடவுளைத் தொழுதனர்.

கருச்சொற்கள்

திணைக்குடிகள், நிமித்தம், பாலையும் ஒந்தியும், பல்லி நிமித்தம், நற்சொல், தீநிமித்தம், கழங்கு, கன்னம், கட்டு

முன்னுரை

பண்டைக்காலத்தில் மக்கள் நம்பிக்கைகளும், நிமித்தங்களும் அனுபவம் மிகுந்த முதியோரால் பார்க்கப்பட்டது. பெருமுதுப் பெண்டிர் நிமித்தம் பார்த்துக் கூறும் செய்தியை நெடுநல்வாடை கூறுகின்றது. பரிசில் பெறச்செல்லும் போது கூத்தர்கள் நிமித்தம் பார்த்தனர் (ம.கா.64-66:446-448). புலவர்கள் பரிசில் பெற வள்ளல்களிடம் செல்வர். அப்பொழுது அவ்வள்ளல்கள் வழங்காமிருப்பதும் உண்டு. அதற்காகப் புலவர்கள் அவ்வள்ளல்களைப் பழிப்பதில்லை. மாறாக தாம் வழியிடத்தே கண்ட

புள்நிமித்தத்தையும் பொழுதைப் பழித்த செய்திகளையும் புறநானூறு (204:10-11) கூறுகின்றது.

இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த மனிதன் பறவைகளைக் கொண்டு குறி அறிந்ததால் பறவையைக் குறிகளையும் குறிக்கும் நிமித்தம் என்ற பொதுப்பெயரால் வழங்கப்பட்டுள்ளது.

அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
(தொல். பொரு.புறத்.47)

தொல்காப்பியர் குறிப்பிடும் மன்னுநிமித்தம், மொழிப் பொருள், தெய்வம் என்ற மூன்றும் குறிப்பிடத்தக்கவை. மன்னு நிமித்தமாவது வழி வழி வந்த புள்நிமித்தம், மொழிப்பொருள் விரிச்சி என்னும் நற்சொல் தெய்வம், வேலன், கட்டு, கழங்கு, வெறியாட்டு முதலிய கடவுட் பரவுதல் என்பதை உரையாசிரியர்கள் விளக்கிக் கூறுகின்றனர்.

புறத்திணையில் வெட்சித்திணைத் துறைகளில் ஒன்றாக 'படை இயங்கு அரவம் பாக்கத்து விரிச்சி' அக்கம் பக்கத்தில் உள்ளோரது வாய்ச்சொற்களே விரிச்சியாக, நற்சொல்லாகக் கொள்ளப்பட்டுள்ளன. நிரை கவர்தலுக்குச் செல்லும் வெட்சி வீரர்கள் விரிச்சி கேட்டுச் சென்றுள்ளனர். நாள், புள், விலங்கு, மரம், நற்சொல், சுட்டு, கழங்கு, வெறியாட்டு போன்றவற்றைக் கொண்டு நிமித்தங்கள் கணிக்கப்பட்டதைச் சங்க கால அக, புற இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. வீரர்கள் போருக்குச் செல்லும் முன்னர் விரிச்சி கேட்க மறி அறுத்து வெட்சிப் பூவையும் தினையையும் தூவிக் குறி கண்டதைத் தகடூர் யாத்திரை குறிப்பிடுகின்றது.

நன்நிமித்தம் தீ நிமித்தம்

நிமித்தங்களில் நன்னிமித்தமும், தீநிமித்தமும் என்னும் நிலை பழந்தமிழர்களிடையே காணப்பட்டது. சுவர்ப்பல்லியின் ஒலி, மனையின் நொச்சியில் உள்ள குயிலின் கூவல், குருகுகள் விசும்பில் எழுந்து பறத்தல், வண்டுகள் புதரில் சூழ்ந்து ஊதுதல், முன்கை வளையும், தோள்வளையும் இறுகுதல், இடக்கண் ஆடுதல், ஆயரது குழல் ஒலி இவையெல்லாம் நன்னிமித்தங்களாகக் கருதப்பட்டன. அதே வேளையில் தீநிமித்தங்களும் பெருமளவில் பார்க்கப்பட்டன. எட்டுத் திசைகளிலும் எரிதல், கொடிய கிரணம் உடைய சூரியன் பல இடத்தும் நெருங்கித் தோன்றுதல், அச்சம் தரும் கூகை முதலிய பறவைகளின் ஒலி, கனவில் பல் நிலத்தில் வீழ்வதைப் போலவும், படைக்கலங்கள் தாம் இருந்த கட்டிலுடன் மறிவதைப் போலவும்

காணப்படுதல் முதலியவையெல்லாம் தீமை நிகழ்வதை அறிவிக்கும் குறிகள் எனப் பழந்தமிழ் மக்கள் நம்பிக்கைக்கொண்டனர். இரவின் நடுவானத்தில் வந்து தும்பி ஒலித்தலும், வீட்டில் வைத்த விளக்கு எரியாது அணைதலும் தீய நிமித்தமாகக் கொள்ளப்பட்டன. தீய நிமித்த அறிகுறியைக் கண்டு அஞ்சி கடவுளைத் தொழுதனர்.

பாலையும் ஓந்தியும்

பறவைகள் நிமித்தம் பெரிதாகப் பேசப்பட்டாலும், ஓணானும் நிமித்தப் பொருளாகக் கருதப்பட்டதைக் காணமுடிகிறது. பாலைவழியில் செல்வார்க்கு ஓந்தி மட்டுமே காணப்படும். ஆகையால் ஓந்தியை நிமித்தக்குறியீடாகக் காட்டுகிறது குறுந்தொகை. சான்று,

வேதின வெரிநின் முது போத்து,
ஆறுசெல் மாக்கள் புள்கொள, பொருந்தும்
சுரனே சென்றனர் ….. ….. …. … **(குறுந்.140)**

என்பதாகும்.

பல்லி நிமித்தம்

குறிகேட்கும் போதும், விரிச்சி கேட்கும் நிமித்தங்களின் போதும் மக்களின் வாயில் இருந்து வரும் நற்சொல் கேட்பது போலவே பல்லி சொல்லும் சொல்லையும் பழந்தமிழர் நிமித்தமாகக் கருதினர். ஒரு பன்றி, பல்லி சொல்லுவதைக் கேட்டுத் தீமையுண்டாகும் என்று கருதி அச்செயலை விட்டுத் தீமையிலிருந்து தப்பியது. பெரிய தினைப்புனத்தில் மேயக் கருதிய பன்றி, பெரிய இயந்திரம் அமைந்த குறுகிய வழியிலே சென்று நுழையும் பொழுது தாழ்க்காமல் விரைவாக ஒரு பக்கத்தில் இருந்து பல்லி கத்தியது, அதனைக் கேட்ட பன்றி அங்குச் சென்றால் துன்பம் வரும் என்று மெல்ல மெல்லப் பின்னே ஊடிக் கல்முழையில் தங்கும் என்று நற்றிணை கூறுகின்றது. சான்று,

எய்ம் முள் அன்ன பரூஉ மயிர் எருத்தின்
செய்யும் மேவல் சிறுகட் பன்றி
ஓங்கு மலை வியன் புனம் படீஇயர், வீங்கு பொறி
நூழை நுழையும் பொழுதில், தாழாது
பாங்கர்ப் பக்கத்துப் பல்லி பட்டென,
மெல்லமெல்லப் பிறக்கே பெயர்ந்து, தன்
கல் அளைப் பள்ளி வதியும் **(நற்.98)**

என்னும் நற்றிணைப் பாடல், மனிதரின் நம்பிக்கையை விலங்கின் மீது ஏற்றிச் சுவைபடக் கூறுகின்றது.

பொருள் திரட்டுவதற்காகத் தன் மனைவியை விட்டுப் பிரிந்துள்ளான் தலைவன். அவன் வரவை தலைவியும், தோழியும் எதிர்ப்பார்த்து நிற்கின்றனர். அப்பொழுது நல்ல நிமித்தங்கள் ஏற்படுவதாகத் தோழி கூறுகின்றாள். நீண்ட சுவரில் இருக்கும் பல்லி நம் பக்கமாக இருந்து தெரிவிக்கிறது என்றாள். மேலும், வீட்டிலுள்ள நொச்சி வேலி கொண்ட தோட்டத்தில் மாமரத்திலிருந்து கொண்டு கரிய குயில் கூவுகிறது. ஆகையால், தலைவன் வரும் காலம் இது எனக் கூறுகிறாள். சான்று,

நெடுஞ் சுவர்ப் பல்லியும் பாங்கில் தேற்றும்;
மனை மா நொச்சி மீமிசை மாச்சினை,
வினை மாண் இருங் குயில் பயிற்றும்
உரம் புரி உள்ளமொடு சுரம் பல நீந்தி,
செய்பொருட்டு அகன்றனர் ஆயினும் பொய்யலர்,
வருவர் வாழி - தோழி - புறவின் **(நற்.246)**

என்னும் நற்றிணைப் பாடலால் அறியமுடிகிறது.

பல்லிக்கு பின் நடக்கயிருப்பதை முன்பே அறிந்து கூறும் ஆற்றல் உடையது என்பதை அகநானூறு (151) கூறுகின்றது. வளமனையை நெடிய சுவற்றில் உள்ள பல்லி கத்திய, தலைவியின் துன்பம் தீர தலைவன் வரும் அறிகுறியாக முன்பே ஒலித்தது என்று நற்றிணை (169) கூறுகின்றது. நல்ல இல்லத்தில் ஒளி பொருந்திய சுவருடன் பொருந்திய பல்லி, தலைவனை நினைக்குந்தோறும் ஒலித்து அவன் வரவைக் குறித்ததால் பல்லியின் குரல் விருப்புக்குரியதானது என்பதை “நயவரு குரல” என்று (நற்:333) கூறுகின்றது.

பல்லியும் பாங்கொத்து இசைத்தன **(கலி.11:21)**

என்று கலித்தொகையும் சான்றாக அமைகிறது.

காக்கை கரைதல்

காக்கைக்குப் பலிச்சோறு இடுவது பண்டைக் காலத்தில் காணப்பட்ட பழக்கமாகும். தென்னை மரங்கள் நிறைந்த தோப்புகளில் வாழும் மக்கள் தந்த பெருஞ்சோற்றுப் பலியைக் கறுப்பான காக்கை உண்ணும் என்று பொருநராற்றுப்படை (பொ-ஆ: 181-184) கூறுகின்றது. வெண்ணல் அரிசியால் ஆக்கிய சோற்றுடன் பசுநெய் கலந்து கலங்களில் காக்கைக்குத் தருவதை,

முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழுகலந்து ஏந்தினும் சிறிது - என் தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே **(குறுந்.210)**

என்று குறுந்தொகைச் சான்று பகர்கின்றது.

வேறு நிறக்கலப்புச் சிறிதுமில்லாத தூய கருநிறச் சிறகுகள் கொண்ட பறவை என்பதை 'மறுவில் தூவிச் சிறு கருங்காக்கை' என்று அழைக்கப்படுகிறது. தனக்கோர் உதவி வேண்டும் என்பதால் இவ்வாறு பாராட்டுவது உலகியலாகும். பசிய ஊனும், நிணமும் கலந்து சமைக்கப்பட்ட உயர்ந்த உணவைப் பொற்கலத்தில் உண்டல் செல்வர்க்குரியது. அத்தகைய சிறப்பினை, சிற்றினப் பறவையாயினும் செல்வர்கள் உண்ணும் உணவைத் தருவேன் என்று கூறுகிறாள் செவிலி. தன்னைப் பிரிந்த மகள் மீண்டும் கூடி, என் சுற்றத்தாரோடு மகிழ்வோடு உண்ண வாய்ப்பாகக் கரைக என்றும் கூறுவதாக அமைகிறது.

மறு இல் தூவிச் சிறு கருங் காக்கை!
அன்புடை மரபின் நின் கிளையோடு ஆரப்
பச்சூன் பெய்த பைந் நிண வல்சி
பொலம் புனை கலத்தில் தருகுவென் மாதோ;
வெஞ்சின விறல் வேற் காளையொடு
அஞ்சில்லோதியை வரக் கரைந்தீமே **(ஐங்கு.391)**

என்று ஐங்குறுநூறு கூறுகின்றது. காக்கை கரையின் விருந்தினர் வருவர் என்பது பழங்காலந் தொட்டு நிலவி வரும் நம்பிக்கையாகும்.

ஆந்தை குழறல் தீநிமித்தம்

காக்கை கரைவதை நல்ல நிமித்தமாக நம்பிய பழந்தமிழர், ஆந்தையின் குழறல் தீமையைத் தரும் என்று நம்பினர். ஆகையால், காக்கை கரைந்தால் நன்மைக்கு என்பதால் உணவு தருவேன் என்று கூறும் தலைவி, ஆந்தையை குழறாமல் இருந்தால் நல்ல உணவு தருவதாகக் கூறுகிறாள். சான்று,

தேயா வளை வாய், தெண் கண், கூர் உகிர்,
வாய்ப் பறை அசாஅம், வலி முந்து கூகை!
மை ஊன் தெரிந்த நெய் வெண் புழுக்கல்,
எலி வான் சூட்டொடு, மலியப் பேணுதும்;
எஞ்சாக் கொள்கை எம் காதலர் வரல் நசைஇத்
துஞ்சாது அலமரு பொழுதின்
அஞ்சு வரக் கடுங் குரல் பயிற்றாதீமே **(நற்.83)**

இச்செய்தியானது, பழந்தமிழரிடையே நன்மை, தீமை என்னும் இருநிலையிலும் வேறு பட்ட அனுபவத்தோடு கூடிய நம்பிக்கையைக் கொண்டிருந்தனர் என்பதை அறியமுடிகிறது.

நிமித்தம் என்பதற்கு சங்க இலக்கியம் 'விரிச்சி' என்று பொருள் கூறுகிறது. விரிச்சி என்பதற்கு 'நற்சொல் கேட்டல்' என்று பொருள். நற்சொல் கேட்டல் என்னும் வழக்கம் அகம், புறம் ஆகிய இருநிலை வாழ்க்கையிலும் பெரும்பான்மை பெற்றுள்ளது. குறிஞ்சி நிலத்தில் விரிச்சி கேட்டல், நற்சொல் கேட்டல் முக்கிய நிகழ்வாகக் காணப்படுகிறது. மக்களின் இயல்பானச் சொற்களே நன்நிமித்தங்களாக அறியப்பட்டன. இவை பின்நாளில் பெரும் வழக்காக மாறியது. தெய்வமேறி ஆடும் வேலனின் வாய்ச்சொல் விரிச்சியாகக் கூறப்படுகிறது. மேலும் கடன் நேர்ந்துக் கொள்ளுதல், காப்பு நாண் அணிதல், நிமித்தம் பார்த்தல், விரிச்சிகேட்டல் என்பவை சங்ககால மக்களின் பெரும் நம்பிக்கைகளாக அமைந்தன என்பதற்கு பின்வரும் குறுந்தொகை பாடல் சான்றாக அமைகிறது.

கடனும் பூணாம்; கைந்நூல் யாவாம்;
புள்ளும் ஓராம்; விரிச்சியும் நில்லாம் **(குறுந்.218)**

என்று கூறுகின்றது. இதில் கூறும் 'புள்' என்பது பறவை நிமித்தம். விரிச்சி என்பது சொல் நிமித்தம். இது நற்சொல் கேட்டல் என்றும் கூறப்படும். பெருமுதுப்பெண்டிர் ஊரின் புறத்தே சென்று நெல்லையும் நீரையும் மலரையும் தூவி தெய்வத்தை வணங்கி நற்சொல் கேட்டலுக்காகக் காத்திருந்ததை இலக்கியங்கள் கூறுகின்றன. மகவு பிறந்த நிலையில் திருந்திய அணிகலன் அணிந்த மகளிர் நன்னிமித்தமாக நின்று நன்நிமித்தம் பார்த்தனர். சான்று,

திருந்து இழை மகளிர் விரிச்சி நிற்ப **(நற்.40)**

என்று நற்றிணைப் கூறுகின்றது.

நாழி கொண்ட நறுவீ முல்லை அரும்பவிழ்
அலரி தூஉய்க்கை தொழுது பெருமுது பெண்டிர்
விரிச்சி நிற்ப **(முல்லை.9-11)**

என்று முல்லைப் பாட்டுச் சான்று கூறுகின்றது.

கூரிய அரிவாளைப் போன்ற முதுகினை உடைய முதிய ஆண் ஓந்தியானது, வழிச் செல்லும் மாந்த நிமித்தமாகக் கொள்ளும்படி வலமாகச் செல்லுவதை நிமித்தமாகக் கொண்டனர். ஓந்தி வலமாகச் சென்றால் நன்மை என்று நம்பிக்கைக் கொண்டனர் என்பதை,

வேதின வெரிதின் ஓதி முது போத்து,
ஆறசெல் மாக்கள் புள்கொள **(குறுந்.140)**

என்று குறுந்தொகை கூறுகின்றது.

கானம் வெம்பிய வறம்கூர் கடத்திடை
வேனில் ஓதி முதுபோத்து **(நற்.186)**

என்னும் நற்றிணை பாடல் சான்றாக அமைகிறது.

வளையல்கள் இறுகினால் நன்நிமித்தம்

காலமல்லாக் காலத்தில் குருகுகள் உயரத்தில் பறத்தலாலும், புதர்களில் போதுகள் இதழ் விரித்தலாலும், அவற்றோடு பொருந்த தலைவியின் இவற்றை நன்நிமித்தங்கள் என்று கருதியதை குறுந்தொகையில் கூறப்பட்டுள்ளது.

குருகும் இருவிசும்பு இவரும்; புதலும்
வரிவண்டு ஊத வாய் நெகிழ்ந்தனவே;
சுரிவளைப் பொலிந்த தோளும் செற்றும் **(குறுந். 218)**

என்பது குறுந்தொகைக் கொடுக்கும் சான்றாகும்.

எப்பொழுதும் நிகழ்வன நிமித்தமாகாது. பறக்காத போது பறந்த குருகும், பூக்காத போது பூத்த புதரும், செறியாத போது செறிந்த வளைகளும், தலைவன் வரவை உணர்த்தும் நன்னிமித்தங்களாகும்.

மேலும், கன்று ஈன்ற பசு, தன் கன்றை நினைத்துச் செல்லும் பசு, குறுக்கிடுவதையும் தீய நிமித்தமாகக் கருதினர் பண்டைத் தமிழர். சான்று,

கன்றுஇல் ஓர்ஆ விலங்கிய
புன்தாள் ஓமைய சுரன் இறந்தோரே (குறுந். 260)

என்றும் விளக்கப்படுகின்றது.

பெண்கட்கு இடக்கண்ணும் ஆண்கட்கு வலக்கண்ணும் துடித்தல் நன்னிமித்தம் என்பது தமிழர் நம்பிக்கை ஆகும். வளை செறிதல் என்றது உடல் பூரித்தலைக் குறித்தது. இதும் நன்னிமித்தமாகக் கொள்ளப்பட்டது. நுண்ணிய அழகுடைய என் கண்ணும் துடிக்கின்றது. அத்துடன், மயிர் ஒழுங்குடைய என் முன்கையில் அணியப் பெற்ற வளையல்களும் செறிக்கின்றன. இந்நிமித்தங்கள், தான் கொள்ளக் கருதிய களிற்றியானை தப்பியமையால், சினம் மிக்கு எழுந்த புலி மழைபொழிதற்குத் திரண்டெழுந்த முகில் முழங்குவது போல் முழங்கும் நாட்டின் தலைவன் உன்னை வரைந்து கொள்ள வருவான் என்று தோழி, தலைவிக்கு நன்னிமித்தம் கூறுவதை பின் வரும் பாடலால் அறியமுடிகிறது. சான்று,

நுண ஏர் புருவத்த கண்ணும் ஆடும்;
மயிர் வார் முன்கை வளையும் செறூஉம்;
களிறு கோட் பிழைத்த கதம் சிறந்து எழு புலி
எழுதரு மழையின் குழுமும்
பெருங் கல் நாடன் வரும்கொல்?-அன்னாய் (ஐங்கு.218)

என்று ஐங்குறுநூறு கூறுகின்றது.

கட்டுப்பார்த்தல்

பாக்கத்து விரிச்சி என்னும் வழக்கை தொல்காப்பியர் கூறுகின்றார். ஆநிரைகளை கவர்தலுக்குச் செல்லும் வெட்சி வீரர்கள் கேட்கும் நிமித்தமே பாகத்து விரிச்சியாகும்.

களவு அலராயினும் காமம் மெய்ப்படுப்பினும்
அளவுமிகத் தோன்றினும் தலைப்பெய்து காணினும்
கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்
ஓட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும் (தொல்.பொருள்.களவு-24)

என்கிறது தொல்காப்பியம்.

கட்டு என்பது சேரியின் முதுபெண்டாகக் குறி சொல்லும் மாதரை மனையகத்துக் கொணர்ந்து வைத்து முறத்திலே பிடிநெல்லையிட்டுத் தெய்வத்திற்குப் பிரம்பிட்டு வழிபாடு செய்து குறி கூறுவது என்றும் குறி கூறும் பெண் குறி கேட்போரை முன் அமர்த்தி பிடிநெல்லை எடுத்து முறத்தில் இட்டுத் தெய்வத்தை வழிபட்டு

அந்நெல்லினை நான்கு நான்காகப் பகுத்து எண்ணி ஒற்றை எண்ணாக வந்தால் நன்மை என்றும், இரட்டை எண்ணாக வந்தால் தீமை நேரும் என்றும் இதன்பொருட்டு எத்தகைய பலன் கிடைக்கும் என்றும் உரைப்பாதாகும்.

செம்முது பெண்டிரோடு நெல் முன் நிறீஇ
கட்டின் கேட்கும் ஆயின் **(நற்.288)**

என்று நற்றிணை கூறுகிறது.

கழங்கு

கழங்கு என்பது கழற்சிக் காய்களைக் குறிக்கும். இது பெண்புலியின் கண்களைப்போன்று இருக்கும் என்று சங்க இலக்கியச் சான்றுகள் கூறுகின்றன.

கழங்கு பார்ப்பது என்பது கழற்காய்களை முருகன் முன் வைத்து அள்ளி எடுக்குங்கால் கூறும் ஒருவகையானக் குறியாகும். கழங்குகளை எண்ணிப் பார்த்து அதற்கேற்பக் குறி கூறும் முறை என்றும், கழற்சிக்காய்களைப் பரப்பி வைத்து எண்ணிச் சொல்லுதல் என்றும், அணங்கறி கழங்கு அதாவது தெய்வத்தான் அறியும் கழங்கு என்றும் விளக்கமளிக்கப்படுகிறது. கழங்குக்குறியில் கழங்குகள் ஒற்றையாக வந்தால் ஒரு பொருளும் இரட்டையாக வந்தால் பிறிதொரு பொருளும் கூறப்பட்டுள்ளன.

வேலன் வெறியாடும் களமாகிய முற்றத்தில் புதிதாகக் கொண்டு வரப்பட்ட புதுமணல் பரப்பி மலர் மாலைகள் முதலியவற்றால் மேலும் அழகுறுத்தி அங்கே மாறுபாட்டுடன் போரிடும் பொருட்டு முருகன் கடவுள் ஏந்திய வேலினைத் தன் கையிலேந்தி கழங்கினை இட்டு குறிப்பார்க்கும் வழக்கம் இருந்திருக்கின்றது என்பதை,

பெய்ம்மணல் முற்றம் கவின்பெற இயற்றி,
மலை வான் கொண்ட சினைஇய வேலன்
கழங்கினான் அறிகுவது என்றால்
நன்றால் அம்மஇ............. **(ஐங்கு. 248)**

என்னும் பாடல் மூலம் அறியமுடிகிறது.

மணல் பரப்பிய முற்றத்தைச் சிறப்புச் செய்து, மெய்ம்மையைக் கூறுமாறு கழங்கிட்டு குறிபார்க்கும் வேலனாகிய படிமத்தானை அன்னையவள் வீட்டிற்கு அழைத்து வந்தாள் என்பதை,

மெய்ம் மணல் முற்றம் கடி கொண்டு
மெய்ம் மலி கழங்கின் வேலற் தந்தே (நற். 268)

என்று பாடல் கூறுகின்றது.

ஆகுவது அறியும் முதுவாய் வேல
கூறுக மாதோ நின் கழங்கின் திட்பம்
எம்மனை முந்துறத் தருமோ
தன்மனை உய்க்குமோ யாதவன் குறிப்பே (அகம். 195)

என்னும் அகநானூற்றுப் பாடலில் 'கழங்கின் திட்பம்' என்பதை கழங்கின் திண்ணிய குறி அதாவது 'பிழையாத குறி' என்று பொருள்படுகிறது. உடன்போக்கில் தன்மகளை அழைத்துச் சென்ற தலைவன் அவளை எம்வீட்டிற்கு முதலில் கொண்டு வருவானா? தன்மனையின்கண் கொண்டு சேர்ப்பானா? என்பதை, கழங்கின் நுண்ணிய குறியால் கூறவேண்டுமென்று தாய் வேலனிடம் கழங்குக்குறி கேட்டதாகவும் அமைந்துள்ளது.

கழங்குக் குறி பொய்த்தலறியாதது என மக்களால் நம்பப்பட்டுள்ளது. 'முதுவாய் வேலன் கழங்கெடுத்துக் கூறும் நற்சொல்லால் தலைவியின் நோய் தீர்ந்தால் நல்லது' என்கிறாள் தோழி. தாயும் மிகுந்த விருப்பத்தோடு கழங்குக்குறி பார்க்கின்றனர். கழங்குக்குறி பார்த்தல் இயல்பான சமூக வழக்கமாக இருந்துள்ளதையும் அகப்பாடல்களில் மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளதையும் காணமுடிகிறது. சான்று,

காதலன் தந்தமை அறியாதுணர்ந்த
ஆணங்குறு கழங்கின் முதுவாய்வேலன்
கிளவியின் தணியின் நன்று (நற். 282)

என்பதாகும்.

கன்னம்

கட்டு, கழங்கு இவற்றின் தொடர் செயல்பாடாக 'கன்னம்' காணப்படுகிறது. கன்னம் என்பதற்குக் காப்பு, படிமம், மருந்து, மந்திரத்தகடு, தகடு உள்ளே வைத்துக் கட்டிய தாயத்து, பொன்னாலானது என்று பொருள்படுகிறது. கன்னம் என்பது 'நோய் தணிவதற்குத் தகடுவைத்துப் பண்ணிக் கொடுக்கும் தாயத்து' என்றும், 'நோய் தணிவதற்குச் செய்து கொடுக்கப்படும் படிமம்' என்றும், "கழற்காய்களைக் கொண்டு கட்டித் தொகுத்த மஞ்சள் காப்பு" என்றும், நோய் தணியும் பொருட்டுக் கோயிலுக்குப் பிராத்தனையாள் செய்து கொடுக்கும் சிறு படிமம் என்றும் விளக்கமளிக்கிறது.

ஈழத்து உரையாசிரியர், கழங்கு மெய்ப்படுத்து என்பதற்கு 'கழற்காயை மெய்யிலணிந்து' என்றும் கன்னந்தூக்கி என்பதற்கு 'மருந்தைத் தூக்கிக் கொண்டு' என்றும் பொருள் தருகிறார். "கன்னந்தூக்கி என்பதற்கு 'கழங்கு நிறுத்தி பின்னர் அதற்குக் கன்னத்தை அணிந்து வெறியாடி" என்று விளக்கம் தருகிறார் (ஐங்குறுநூறு.2004. 523).

கன்னம் என்பது நோய் தணிதற்குப் பண்ணிக் கொடுக்கும் மந்திரத் தகடு உள்ளே வைத்துக் கட்டிய தாயத்து என்கிறார். இது பொன்னாலும் செய்யப்படும் என்பதற்குப் 'பொன்செய் கன்னம் பொலிய' (அகம்.137) என்று மேற்கோளும் காட்டுகின்றார். ஈழத்து உரையாளர் மருந்து என்று உரையிற் கூறிய விளக்கத்தில் பழைய உரையாசிரியரைத் தழுவி 'கன்னம் என்பது நோய் தணித்தற்குச் செய்து கொடுக்கும் ஓர் படிவம்' என்றும் பொருள் தருகின்றார். கழங்கு மெய்ப்படுத்தலாவது, 'இது தெய்வத்தானாயிற்றோ பிறிதொன்றினானாயிற்றோ எனத் தெய்வம் பராவி அக்கழற்காய்களை எண்ணிப் பார்த்தல் என்றும் கழற்காய்களைத் தொகுத்து அவற்றிற்கு மஞ்சள் காப்புக் கட்டிஇம்மையல் தீருங்காறும் இக்காப்பினை அணிந்திருக்க (ஐங்கு-2004.523) எனச் சுட்டுவது கன்னம் என்றும் கூறுகின்றார் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை. கழங்குகளாலே ஆராய்ந்து உண்மையினை வெளிப்படுத்துக் கன்னத்தைக் கையில் தூக்கிக் கொண்டு (ஐங்கு-2004-524) என்று பெருமழைப்புலவர் கூறுகிறார்.

கழங்குகளைப் பரப்பி எண்ணி ஒற்றையாயின் இன்னது என்றும் இரட்டையாயின் இன்னது என்றும் துணிந்து கூறப்படுகிறது. தஞ்சை மாவட்டத்துச் சிற்றூர்களில் நெல்லையோ சோளத்தையோ இங்ஙனம் எண்ணுவதும் துடைப்பத்திலுள்ள ஈர்க்குகளில் ஒரு பகுதியைத் தனியே பிரித்து அதனை எண்ணிச் சொல்லலும் உண்டு என்பதையும் ஆராய்ச்சியாள்கள் கூறுகின்றனர்.

பழைய உரையாளர்கள்; கூறும் படிமம் என்பது பொற்றகட்டில் தெய்வ உருவத்தைக் கீறுவிதாகலாமோ என்ற ஐயம் நிகழ்கின்றது. தற்காலத்தில் சிறு தெய்வவழிபாடு செய்வோர் மாவினால் ஒரு பாவையைச் செய்து அதனைக் கொண்டு சில மந்திரச் சடங்குகளைச் செய்வர். கழிப்பு விடுதல், கழிப்புக் கழித்தல் என்று இதனை வழங்குவர். முருகு என வேலன் மொழிவது தலைவனுக்கு உரிமையாகுமோ என்றது. நம் தலைவன் பெயர் முருகன் என்பதாயின் அவன் கூறுவது மெய்யாகலாம் என்பது பொருளாகக் கொள்ளப்படுகிறது.

இன்றைய நிலையில் மந்திரம் ஓதி எந்திரம் வைத்துக் கட்டப்படும் தாயத்து என்னும் பொருளுக்கு இணையானதாகக் கன்னத்தைக் குறிப்பிடல் பொருத்தமாகும் என்கிறார். (ஓ.முத்தையர்.2011-156)

பொய்த்தல் இல்லாத மரபினை உடைய ஊர் முதுமையுடைய வேலன் கழங்கை மெய்யின்கண் அணிந்து பாவையைத் தூக்கி அவ்வேலன் வழக்கப்படியே உரிய சடங்குகளைச் செய்து வெறியாடி இவள் நோய்க்கு முருகனுடைய அணங்குதலே காரணம் என்று பொய் சொல்வான் என்பதை,

பொய்யா மரபின் ஊர் முது வேலன்
கழங்கு மெய்ப் படுத்து கன்னம் தூக்கி
முருகு என மொழியும் (ஐங்கு.245)

பொன்னகர் வரைப்பிற் கன்னந்தூக்கி
முருகென மொழியும் (ஐங்கு.246)

என்னும் பாடல் கூறுகின்றது. மேலும் வெறியாடும் வேலன் தலைவிக்கு மாறுதல் ஏற்பட்டதற்கான காரணத்தைக் கூறியதில்லை என்பதும், வேலன் உண்மையை உரைக்காது பொய்யுரைத்தலே மிகுதி என்றும் தெளிவாகிறது.

மேலும் ஐங்குறுநூற்றுப் பாடல்வழி கழங்கின் தன்மையை ஆராய்ந்து முருகால் வந்த நோய் என்று அறிந்து கன்னம் விளக்கப்பட்டுள்ளது.

முடிவுரை

மனித இனத்தோற்ற வரலாற்றில் முதன்மைத்துவம் பெருவது நம்பிக்கைகள். பழந்தமிழரின் பழமையான வாழ்வியல் சூழலை நம்பிக்கைகள் விளக்குகின்றன. தொன்மைக் குடிகளின் நம்பிக்கைகளை கள ஆய்வோடு நிரூப்பிக்கின்றது மானிடவியல் ஆய்வு. மானிடரின் உச்ச அச்ச நிலையே நம்பிக்கையின் பிறப்பிடமாகும். அச்சவுணர்வின் வெளிப்பாடு அனைத்தும் இயற்கை ஆற்றல்களின் வெளிப்பாடேயாகும். குறி பார்க்கும் வழக்கம், பலியிடல், நிமித்தம் பார்த்தல் உளவியல் அறிவினை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. மந்திர தந்திரங்களால் நோய் தீரும் என்ற நம்பிக்கையினை கட்டு, கழங்கு, கன்னம் என்னும் நம்பிக்கைகளைக் கடைப்பிடித்துள்ளனர். இம்முறை இயல்பான சமூக வழக்கமாக இருந்துள்ளது.

துணைநூற்பட்டியல்

1. உவே, சாமிநாதையர், உரையாசிரியர். *குறுந்தொகை.* சென்னை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1955.
2. உவே, சாமிநாதையர், உரையாசிரியர். *ஐங்குறுநூறு.* சென்னை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1949.
3. சவே, சுப்பிரமணியன். *சங்க இலக்கியம்,* மூலமும் தெளிவுரையும். தொகுதி 2, சென்னை, மணிவாசகர் பதிப்பகம், 2010.
4. அ, தட்ணாமூர்த்தி. உரையாசிரியர். *ஐங்குறுநூறு.* சென்னை, நியு செஞ்சுரி பதிப்பகம், 2004.

5. நாராயணசாமி. *நற்றிணை, மூலமும் தெளிவுரையும்*. சென்னை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 2001.
6. ஔவை, துறைசாமிப்பிள்ளை, உரையாசிரியர். *ஐங்குறுநூறு*, மூலமும்தெளிவுரையும். சென்னை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 2004.
7. வேங்கடசாமி நாட்டார், உரையாசிரியர். *அகநானூறு*. சென்னை, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், 1946.

REFERENCES

1. U V, Swamynathaiyar, Text Editor. *Kurunthogai*. Chennai, Thirunelveli South Indian Publication Corporation, 1955.
2. U V, Swamynathaiyar, Text Editor. *Ainkurunuru*. Chennai, Thirunelveli South Indian Publication Corporation, 1949.
3. S V, Subramaniyan. *Sangam Elakkiyam*. Chennai, Manivasagar Publication, 2010.
4. A, Thatchanamoorty, Text Editor. *Ainkurunuru*. Chennai, New century Publication, 2004.
5. Narayanasamy Iyar. *Natrinai, source and text*. Chennai, Thirunalveli South Indian Publication Corporation, 1952.
6. O, Thuraisamippillai, Text Editor. *Ingurunooru*. Chennai, Thirunalveli South Indian Publication Corporation, 2004.
7. Vengatasamy Naattar, Text Editor. *Agananooru*. Chennai, Thirunalveli South Indian Publication Corporation, 1946.